தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-7-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு உணவு மற்றும் உணவுப் பாதுகாப்பு பற்றிய ஆராய்ச்சிக்காக புதிய நிதி உதவி

இந்தியத் திருநாடு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு கொண்டிருந்தாலும், ஊட்டச்சத்துக்குறைபாடு நம் மக்களிடையே மிகுந்து காணப்படுகிறது.

இதனால், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளிடையே ஆரோக்கிய குறைபாடுகளும், பெரியோர்களிடையே வாழ்க்கை முறை (Life style disorders) நோய்களான நீரிழிவு, இதய நோய், சீறுநீரக செயல் இழப்பு போன்ற நோய்கள் அதிகம் காணப்படுகிறது.

ஊட்டச்சத்துக் குறைப்பாட்டை நிவர்த்தி செய்ய வேண்டுமானால், அறுவடை பின்செய் நேர்த்தி செவ்வனே செய்யாத காரணத்தினால் ஏற்படும் 20 விழுக்காடு இழப்பைக் குறைக்க வேண்டும், ஊட்டச்சத்து மிகுந்த சிறுதானிய பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவேண்டும், மேலும் உணவுப்பொருட்களில் ஊட்டச்சத்துக்களை தக்கவைக்கும் பதப்படுத்துலை அதிசுகாதாரமான முறைகளில் கையாள வேண்டும்.

இவற்றையெல்லாம் செயல்முறை படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உணவியல் மற்றும் சத்தியல் என்னும் இளநிலை பட்டப் படிப்பானது இந்த கல்வியாண்டில் இருந்து தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், இவை சம்பந்தமான ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழத்தின் கீழ், மதுரையில் இயங்கும் மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூ. 67,40,000/- நிதி உதவி அளித்துள்ளது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்